## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 166/2024**

திரு.மணி (P.W.–1) **01.04.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து 30.08.1989 ம் தேதியிட்ட கிரையா ஆவணத்தின் படி பழனிசாமிக்கும், அர்ஜுனனுக்கும் பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். தாவா சொத்து க.ச.எண்.38/1, 38/2 பூமியில் அமைந்துள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு பொதுவில் ஒரு ஏக்கர் பாத்தியம் என்றால் ஆமாம். 5 முதல் 7 பிரதிவாதிகளை வாரிசுதாரர்களாக விட்டு இறந்து போய் உள்ளார் என்றால் ஆமாம். தாவா 2 முதல் 4 பிரதிவாதிகள் முதல் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் வாய்மொழி பாகப்பிரிவினைப்படி பிரதிவாதிகளுக்கு பாதிக்கப்பட்டது என்றால் ஆமாம்.

2. வாய்மொழி பாகப்பிரிவினை விவரங்கள் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கில் 31.03.2013 ல் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொத்துக்கள் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் வில்லங்க விவகாரங்கள் இருப்பதால் பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்களா என்றால் ஆமாம். கூடுதல் கால அவகாசம் ஏற்பட்டு விட்டதால் பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு கூடுதல் விலை கேட்டார்கள் என்றால் ஆமாம். கூடுதல் விலைக்கு நான் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் ஆமாம்.

3. தாவா சொத்து தற்சமயம் அதிக விலை மதிப்புடையது என்பதாலும் தாவா கிரைய காலத்திற்குள் தாவா சொத்தை நான் கிரயம் பெற தவறியதால் பிரதிவாதிகள் தாவா சொத்தை எனக்கு கிரயம் செய்து கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

கேள்வி

தாவா கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ–4 பதிவு ஏற்படாத ஆவணம்?

பதில்

சரி

கேள்வி

கிரைய ஒப்பந்த ஆவணத்தின் படி கிரைய காலம் என்ன ?

பதில்

ஒரு மாதம்

கேள்வி

கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்ட போது முன் தொகை எவ்வளவு கொடுத்தீர்கள்?

பதில்

ஆறு லட்சம் கொடுக்கப்பட்டது

கேள்வி

கிரைய ஒப்பந்த ஆவணத்தின் படி ஒரு மாதத்திற்கு பிறகு பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுக்க தவறிய பிறகு ஏன் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை?

பதில்

அனுப்பவில்லை.

கேள்வி

தாவா 24.04.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிரைய காலம் 17.09.2023 ம் தேதி முடிவடைந்து இருந்தபோது ஏன் 7 மாதங்கள் காலதாமதமாக தாவா தாக்கல் செய்யப்பட்டதற்கான காரணம் என்ன?

பதில்

பேச்சுவார்த்தையில் பேசி பார்த்து முடிவு ஏற்படவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN
Date: 2026.04.01 18:37:51 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.